01-04-2023 காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

இனிமையான குழந்தைகளே! இலட்சியம் என்ற சோப்பால் ஆத்மா என்ற ஆடையை (வஸ்திரம்) சுத்தம் செய்யுங்கள், உள்ளே எந்த அழுக்கும் இருக்கக் கூடாது.

கேள்வி: புருஷார்த்தம் செய்யும் குழந்தைகள் கர்மத்தின் எந்த ஆழ்ந்த இரகசியத்தை அறிந்து கொண்டு புருஷார்தத்தில் எப்போதும் ஈடுபட்டு இருக்க வேண்டும்?

பதில்: ஆத்மாவில் அநேகப் பிறவிகளின் பாவ கர்மங்களின் பாவச் சுமை இருக்கின்றது, அநேக கடுமையான சமஸ்காரங்கள் உள்ளன, அந்த சமஸ்காரங்களை யோகத்தைத் தவிர மாற்றம் செய்ய முடியாது. ஆத்மா பாவ கர்மம் செய்து-செய்து முற்றிலும் அழுக்காகி விட்டது ஆகையால் அதை சுத்தம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். பாபாவின் நினைவைத் தவிர அது சுத்தம் ஆகாது. நினைவில் புயல்கள் வரலாம் ஆனாலும் கூட எவ்வளவு புயல்கள் வந்தாலும் அவர்கள் புருஷார்தத்தில் எப்போதும் ஈடுபடுவார்கள்.

பாடல்: நான் தவழ்ந்து வரும் குழந்தையாக இருக்கின்றேன்......

ஓம்சாந்தி. இப்போது பாபாவின் குழந்தைகளாக இருப்பவர்கள், நான் இப்போது புதிய சிறிய குழந்தையாக இருக்கின்றேன் பாபா, என்று கூறுகின்றார்கள். சிலர் ஒரு மாதக் குழந்தையாக இருக்கிறார், சிலர் எட்டு நாட்களாக இருக்கிறார், இங்கே அனைவரும் சிறுவர் களாகத் தானே இருக்கிறார்கள். புதிய குழந்தைகள், நாங்கள் சிறிய குழந்தைகள் என்கிறார்கள். சிலருக்கு 20 வருடம், சிலருக்கு 15 வருடம் ஆகியுள்ளது. வளர்ந்து கொண்டே இருக்கிறார்கள். குழந்தையாகி விட்டேன் ஆனால் சிறு குழந்தையாக இருக்கிறேன் என்கிறார்கள். எங்களுக்கும் கூட ஆஸ்தியைத் தாருங்கள் அதாவது எங்கள் மீது ஞான மழை பொழியுங்கள் என்கிறார்கள். ஞான மழை பொழிகிறது அல்லவா! இவரை பாக்கியசாலி ரதம் என்று சொல்லப்படுகிறது, இவர் தான் ஞான கங்கையை கொண்டு வந்தார் அல்லது ஞான அமிர்தம் கொண்டு வந்தார், இவருக்கு நிறைய பெயர்கள் உள்ளன. பாகீரதம் என்றும், அர்சுணன் என்றும், தட்ச பிரஜாபிதா என்றும் கூறப்படுகிறது. ஆனால் அனைத்தும் ஒருவரான பிரஜாபிதா ஆவார். அவர் தான் அனைவருக் கும் இலட்சியம் தருகிறார். அதிகமான குழந்தைகள் வருகிறார்கள், அவர்களின் ஆடை மிகவும் அழுக்காக பழையதாகி விட்டது. சிலருக்கு எப்படி இருக்கிறது, ஒரு சிலருக்கு எப்படி இருக் கிறது! ஒருசிலரின் ஆடை கந்தலாக இருக்கிறது, துவைத்தாலே கிழிந்து விடுகிறது. இந்த வண்ணான் வேலை எத்தனை வருடங்களாக நடக்கின்றது என்று தந்தை தெரிவிக் கின்றார். துணிகளை சுத்தம் செய்து கொண்டே இருக்கின்றேன் என்கிறார். சிலர் நன்றாகி விட்டார்கள். சிலரை எவ்வளவு சுத்தம் செய்தாலும் பிறகும் அழுக்குக் கறைகள் இருந்து விடுகிறது. ஞானம் என்ற பிரம்பால் வேகமாக அடித்தால் கிழிந்துவிடுகிறது. ஓடி விடுகின்றார்கள். எவர் சுத்தமாக ஆகவில்லையோ, தானும் சுத்தம் ஆகாமல், பிறரையும் சுத்தம் செய்யவில்லை என்றால் இவர்களுக்கு அதிர்ஷடம் இல்லை என்று கருதப்படுகிறது. எவர் ஒருவர், தான் சுத்தமாகின்றார் களோ அவர்கள் பிறரின் ஆடையையும் சுத்தம் செய்து கொண்டே இருப்பார்கள். இவர் வண்ணான் ஆகவும் இருக்கின்றார். ஆத்மா துôய்மை ஆவதால் பின்னர் உடல் கூட துôய்மை யாகக் கிடைக்கின்றது.

கருமையில் இருந்து வெண்மை ஆகிவிடுகிறீர்கள். இந்த நேரத்தில் அனைவரும் கருமையாக இருக்கின்றார்கள். உங்களை முழுமையாக இராஜாவுக்கு எல்லாம் இராஜாவாக ஆக்குவதற்காக தந்தை வந்துள்ளார். ஏனெனில் இப்போது அனைவரும் பாவ ஆத்மாவாக இருக்கின்றார்கள் அல்லவா! இந்த பிறவியைப் பற்றி நமக்குத் தெரிகிறது. முற்பிறவியைக் குறித்து எதுவும் அறிய முடியாது. புரிய வைத்தாலும் புரிந்து கொள்வதில்லை, மாறுவதில்லை என்றால் ஒருவேளை இவர்கள் முன்பு மிகவும் பதீதர்களாக இருந்திருப்பார்கள் அதனால் அவர்களின் சமஸ்காரம் மாறுவதில்லை என்று புரிய வைக்கப்படுகிறது. எவ்வாறு சூடான தோசை கல்லில் தண்ணீர் தெளித்தவுடன் காய்ந்து விடுகிறது.

பகவான் வந்து இலட்சியம் என்றச் சோப்பால் சுத்தம் செய்கின்றார். ஒவ்வொருவரின் நாடியும் பார்க்கப்படுகிறது. குழந்தைகளே என்னை நினைவுச் செய்தால் ஆத்மா தூய்மையாகிவிடும் என்று தந்தை மிகவும் எளிதாகப் புரிய வைக்கின்றார். மோகத்தை அழிக்க வேண்டும். மிகவும் அன்பானவர் பாபா, அரைகல்பமாக துவாபர யுகத்தில் இருந்து பக்தர்கள் பக்தி செய்து வருகின்றார்கள். அவர்கள் தான் மீண்டும் தேவி- தேவதைகளாகக் கூடியவர்கள். தெரிந்து விடுகிறது அல்லவா! எழுந்திருக்கும் போதும், உட்காரும் போதும் தந்தையை நினைவுச் செய்யுங்கள் என்று தந்தை அறிவிக்கின்றார். எவ்வாறு குமாருக்கும், குமாரிக்கும் திருமணம் நிச்சயம் ஆகிவிட்டால் ஒருவரை ஒருவர் எப்போதும் நினைவு செய் கின்றார்கள் அல்லவா. இங்கே நாயகனையே விட்டு ஓடிவிடுகின்றார்கள். இந்த நாயகன் சொர்க்கத்திற்கு எஜமானராக ஆக்குகின்றார் அவரை நினைப்பதே இல்லை. இவ்வாறு வேறு எவரும் சொல்ல முடியாது. நான் கல்பத்திற்கு முன்பு போன்று கொடிய பாவங்களை செய்த ஆத்மாக்களையும் கூட சீர்திருத்தம் செய்ய வருகின்றேன் என்று தெரிவிக்கின்றார். சிலரின் ஆடை நன்றாக இருக்கிறது, சிலரின் ஆடை மிகவும் அழுக்காக உள்ளது. பாபா என்னை தூய்மையாக சுத்தப் படுத்துங்கள் என்று பெண்கள் கேட்டுக் கொள்கிறார்கள், ஆனால் ஆண் நான் விகாரம் இல்லாமல் இருக்க முடியாது என்கிறார், இதனால் சண்டை வருகிறது. அபலைப் பெண்மணி களுக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்படுகிறது! எவர் தூய்மையாக இருப்பதில்லையோ அவர்கள் எத்தனை தடைகள் ஏற்படுத்துகிறார்கள்! சந்நியாசிகளை எவரும் தடுக்க முடியாது. அரசாங்கமும் கூட உங்கள் குழந்தைகள் பிள்ளைகளை யார் கவனித்துக் கொள்வார்? என்று கேட்க முடியாது. இங்கே இதற்காக தான் சண்டைகள் நடக்கிறது. ஒருவர் தூய்மை அடை கின்றார், மற்றவர் பிறகு கொடிய பாவியாகி விடுகிறார். எவர் உறுதியான நம்பிக்கையில் இருக்கின்றாரோ அவர் எவரையும் பொருட் படுத்துவதில்லை. முற்றிலும் மோகத்தை அழித்து விடுகின்றார்கள். இராஜ்யத்தைக் கூட உதைத்து தள்ளிவிடுகின்றார்கள். பக்திமார்க்கத்திலுள்ள மீராவைப் போன்று இருக்கிறார்கள். பக்தி மார்க்கத்தில் இது போன்று அதிகமாக உள்ளார்கள். இங்கே மிகவும் குறைவாகத் தான் இவ்வாறு வெளிப்படுகின்றார்கள். ஆமாம், நாங்கள் அவசியம் தூய்மையாக இருக்க வேண்டும் என்று துணிவோடு வருகிறார்கள். எங்களுக்கு சொத்து இராஜ்யம் ஒன்றும் தேவையில்லை என்கிறார்கள். எவ்வாறு அப்போது இராஜாக்கள் இராணி களை பொருட்படுத்தாமல் விட்டு வந்தார்கள், அதுபோன்று இப்போது இராணிகள் இராஜாக் களை பொருட்படுத்தாமல் விட்டு வருவார்கள். சொர்க்கத்திற்கு எஜமானர் ஆனால் போதும் என்கிறார்கள். பக்திமார்க்கத்தில் கூட சில இராஜாக்கள் சந்நியாசம்

செய்ததாக சொல்லப் படுகிறது. இப்போது இது ஞானமார்கமாகும். நான் எவ்வளவு து்ரம் வண்ணான் ஆகி யுள்ளேன் என்று ஒவ்வொருவரும் அறிய முடியும். ஏன் ஒரு நல்ல வண்ணான் ஆகக் கூடாது? வண்ணானில் கூட வரிசைக்கிரமமாக உள்ளார்கள் அல்லவா? அயல்நாட்டிற்கு ஆடை சுத்தம் செய்ய அனுப்புகிறார்கள் என்றால் அவர் அவசியம் நன்றாக ஆடையை சுத்தம் செய்வார் என்று கருத வேண்டும். இங்கும் கூட அவ்வாறு இருப்பார். சிலர் உடனடியாக சுத்தமாகி ஸ்ரீமத்படி நடந்து விடுகின்றார்கள். தானும் பாவனமாகி பிறரையும் பாவனமாக்குகிறார். ஒரு ஆண் து்ய்மையாக இருப்பதில்லை என்றால் ஒரு பெண் எவ்வளவு சகித்துக் கொள்ள வேண்டி யுள்ளது. தற்பொழுது மிகவும் கவனமாக இருக்க வேண்டி யுள்ளது. ஏனெனில் ஒவ்வொரு மனிதரும் ஐந்து பூதத்திற்கு வசமாகி உள்ளார்கள். கோபத்தின் வசத்தால் கூட நிறைய நஷ்டங்களை ஏற்படுத்துகின்றார்கள். பாபா தன்வசம் இழந்து விட்டோம் என்கிறார்கள். தேக அகங்காரம் வந்து விடுகிறது. தேக அகங்காரத்தில் வந்தால் பிறகு மற்ற அனைத்து விகாரங் களும் வந்து விடுகிறது. தன்னை ஆத்மா என்று நினைத்து தந்தையை நினைக்கவில்லை என்றால் ரெஜிஸ்டர் கெட்டு விடுகிறது. மனதில் புயல் வந்தாலும் கர்மேந்தியங்களால் தவறு செய்யக் கூடாது.

உலகத்திற்கு எஜமானர் ஆவது என்றால் ஒன்றும் சித்தி வீட்டிற்கு போவது போன்று கிடையாது என்று தந்தை அறிவிக்கிறார். இலட்சுமி-நாராயணர் சொர்க்கத்திற்கு எஜமானர் ஆகின்றார்கள் என்றால் அவர்கள் அவசியம் வெகு அதிகமான புருஷார்த்தம் செய்திருப்பார்கள் அல்லவா! தந்தை வந்து சொர்க்கத்திற்கு எஜமானர் ஆக்குகின்றார் என்றால் அவசியம் அவரின் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். ஒரு தந்தை தான் ஸ்ரீமத் தருகின்றார். மற்ற அனைத்தும் பூத வழியாகும். ஸ்ரீமத்தை மறந்தால் மற்ற இந்த பூதங்கள் வந்துவிடும். உடனடியாக மாயா தாக்கி கீழே வீழ்த்திவிடுகிறது. நான் எவ்வளவு அழுக்காக இருக்கிறேன்? என்று தன்னைத் தான் பார்க்க வேண்டும். குமார்கா (தாதி பிரகாஷ்மணி) தாதியைப் போன்று நல்ல குழந்தைகள் இருக் கிறார்கள்.. சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள் மிகவும் அழுக்கான உடைகளை சுத்தம் செய்கிறார்கள், ஐந்து விகாரத்தின் மீது வெற்றி அடையச் செய்கிறார்கள். சிலருக்குள் காமம் என்ற பூதம் வந்து விட்டால் ஒரேயடியாக பெயர் கெட்டு விடுகிறது. அவர்கள் அழுக்காகி விட்டால் அவர்களை பி.கே. என்று சொல்ல முடியாது. அவர்களின் ரெஜிஸ்டர் கெட்டுவிடு கிறது. சுத்தம் செய்வதற்காக தந்தை எவ்வளவு தடியால் அடிக்கின்றார். தந்தையை நினைவு செய்தால் துணி சுத்தமாகும், இல்லையெனில் பூதங்கள் வந்து கொண்டே இருக்கும் என்று தந்தை ஆலோசனை கூறுகிறார். தாரணை செய்ய முடியவில்லை என்றால் நான் மிகவும் அழுக்கானவன் என்று கருத வேண்டும். முற்பிறவியில் ஒருவேளை நான் மிகவும் அழுக்காக இருந்தேன் என்றால் வெட்கப்பட வேண்டும். புருஷார்த்தம் செய்ய முடியவில்லை என்றால் அழுக்கு மேல் அழுக்கு தங்கிவிடும். தகுதியற்றவராகி விடுகின்றனர். நீங்கள் தகுதியுள்ளவர் ஆவதற்காக இங்கே வந்துள்ளீர்கள். நல்ல ஆடையாக இருந்தால் சூர்யவம்சம் சந்திரவம்சத்தை சேர்ந்தவர் ஆகலாம். தந்தை இப்போது எல்லையற்ற விசாலபுத்தியைத் தந்துள்ளார். முழு உலக சக்கரத்தையும் அறிந்து கொண்டீர்கள். ஹே! பதீத-பாவனன் என்று அழைக் கின்றார்கள் என்றால் அவசியம் அவர் ஒருவராகத் தான் இருப்பார், அவரைத் தான் சொர்க்கத் தின்

இறை தந்தை என்று அழைக்கப்படுகிறது. அவர் நிராகாரமாக இருக்கின்றார். 5000 வருடத்திற்கு பிறகு இந்த சலவை தொழிலாளி வந்துள்ளார். ஒவ்வொரு 5000 வருடத்திற்குப் பிறகு நான் பாரதத் திற்குத் தான் சலவை தொழிலாளி ஆகின்றேன் என்று தந்தை அறிவிக்கின்றார். இந்த யோகத்தால் நீங்கள் முழு து௦ய்மை அடைந்து விடுகிறீர்கள். பின்னர் 21 பிறவிகளுக்கு நீங்கள் பதீதமாவதில்லை. அங்கே மாயா இல்லை. பாவனம் ஆகாமல் நீங்கள் வைகுண்டம் செல்ல முடியாது. பிரஜைகளாக நிறைய பேர் ஆகின்றார்கள், ஆனால் இதில் திருப்தி அடையக் கூடாது.

நீங்கள் தாய்-தந்தையாக இருக்கின்றீர்கள் நாங்கள் உங்கள் குழந்தையாக இருக் கின்றோம் என்று மகிமை செய்கின்றார்கள், உங்களின் கருணையால் நாங்கள் இராஜ்ய சுகத்தை அடைந்தோம் என்கிறார்கள். மற்றபடி பிரஜை ஆகின்றோம் என்று கூறுவதில்லை. இது துக்கமான உலகமாக இருக்கிறது. செல்வந்தர்களாக இருக்கலாம் ஏனெனில் நல்ல கர்மம் செய்துள்ளார்கள். இங்கு லௌகீக இராஜ்யமாக உள்ளது, சொர்க்கத்தில் பாரலௌகீக இராஜ்ய மாக இருக்கும். இரண்டும் எவ்வாறு கிடைக்கிறது என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். என்னுடைய ஸ்ரீமத்படி நடப்பதால் நீங்கள் மீண்டும் 21 பிறவிக்குத் தண்டனைகள் அடைய வேண்டியதில்லை என்று தந்தை தெரிவிக்கின்றார். தொழிலை விடுத்து இங்கே வந்து உட்காருங்கள் என்று கூறுவதில்லை. பிள்ளைகளை நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். அவர்களை நீங்கள் படைத்துள்ளீர்கள். தொழிலில் நஷ்டம், இலாபம் ஏற்படத்தான் செய்யும். சத்திய யுகத்தில் பலன் மட்டும் தான் இருக்கும். அங்கே நஷ்டம் என்பதே கிடையாது. இங்கே ஸ்ரீமத்படி நடப்பதால் 21 பிறவிக்கு நஷ்டம் என்பதே கிடையாது அவ்வளவு பலனை அடைகிறீர்கள். முழுமையான ஞானத்தைப் பெறாததால் பதவி குறைவாகக் கிடைக்கிறது. ஸ்ரீமத்படி நடந்து மோகத்தை அழித்து விட்டால் நல்ல பதவியைப் பெறுவீர்கள். அவர்களுக்கு மதிப்பு இங்கேயே கிடைக்கிறது. தாய்-தந்தையைப் பின்பற்றினால் வரிசைப்படி இராஜ்யம் கிடைக்கும். தாய் தந்தை கர்மம் செய்வதை கற்றுக் கொண்ட பிறகு கற்பிக்கின்றார்கள். ஸ்ரீமத்படி செல்லுங்கள், விகாரத்தில் செல்லாதீர்கள் என்று அறிவிக்கின்றார்கள். பத்தியத்தை கடைபிடியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறார். அநேக யுக்திகள் அறிவித்துக் கொண்டே இருக்கின்றார். அழியாத மருத்துவராக தந்தை இருக்கின்றார். மற்றபடி அனைவரும் அவருடைய நோயாளிகள். நீங்கள் அவருக்கு உதவி யாளராக இருக்கின்றீர்கள். நீங்கள் அவருக்கு வரிசைக்கிரமமான அசிஸ்டன்ட் (உதவி) மருத்துவராக இருக்கிறீர்கள். ஒரு பாபா தான் அனைவரையும் விட அறிவாளியான அழியாத மருத்துவராக இருக்கிறார். மருத்து வரிலும் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள் அல்லவா! சிலர் இலட்சக்கணக்காக சம்பாதிக் கின்றார்கள், சிலர் தனது வயிற்றைக் கூட நிரப்ப முடிவதில்லை. சிலர் சென்று கொண்டிருக்கும் போதே தந்தையின் கையை விட்டு விடுகிறார்கள். அவர் களை சீ... சீ... அழுக்கான ஆடையை அணிந்தவர் என்று கூறுவோம். அநேகப் பிறவிகளின் சம்ஸ்காரம் தன்வசம் ஈர்த்துவிடுகிறது. அதனால் ஞானம் தாரணை ஆவதில்லை. ஞானத்தின் நிறம் ஏறுவதில்லை. இதுவும் நாடகம்! தந்தை சுகத்தைத் தருவதற்காக வந்துள்ளார். சாதுக் களையும் கூட தனது இருப்பிடமான நிர்வாணதாமத்திற்கு அனுப்பிவிடுகிறார். பாரதத்தின் ஆதி சனாதன தேவி-தேவதா தர்மம் இருந்தது, அது இப்போது மறைந்து விட்டது. தனது தர்மமும்-கர்மமும் தாழ்ந்து விட்டது.

தேவி-தேவதைகள் என்று சொல்லக் கூடியவர் எவரும் இல்லை. இல்லாததால் தான் நான் வந்து ஸ்தாபனை செய்கின்றேன் என்கிறார். மற்ற அனைத்து தர்மத்தைச் சேர்ந்தவர்களை திரும்ப அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது. மனிதர்கள் முக்திதாமத்திற்குச் செல்ல விரும்பு கின்றார்கள். நான் இதற்காகத் தான் வந்துள்ளேன் என்று தந்தை தெரிவிக்கின்றார். முன்பு நான் மிகவும் பதீதாக இருந்தேனா அதனால் தான் தாரணை ஆகவில்லையா என்று குழந்தைகள் நீங்கள் தன்னைத்தான் கேளுங்கள். மம்மா-பாபாவின் மனம் என்ற சிம்மாசனத்தில் அமர வில்லை என்றால் அங்கே சென்று தாச-தாசி ஆவீர்கள் என்கிறார். நான் பதீதர்களை பாவனம் ஆக்குவதற்காக வந்துள்ளேன் என்று தந்தை அறிவிக்கின்றார். இந்த உடலை ஆதாரமாக எடுக்கின்றேன் என்கிறார். இல்லையெனில் பதீதர்களை பாவனமாக எவ்வாறு ஆக்குவேன்? தந்தை மூலமாக நாங்கள் தேவி-தேவதைகளாக பாவனமாகிக் கொண்டிருக்கின்றோம் என்று குழந்தைகளாகிய நீங்கள் கூறுகிறீர்கள். இப்போது அவ்வாறு ஆகவில்லை, புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஸ்ரீமத்படி நடந்து சிரேஷ்டமாக வேண்டும். இந்த ஞானத்தை தந்தை தான் வந்து தருகின்றார். இறை தந்தையை மட்டும் தான் ஞானம் நிறைந்தவர் என்று சொல்லப் படுகிறது. அவர்தான் முழு பிரம்மாண்டம், மூலவதனம், சூட்சுமவதனம், ஸ்துôலவதனம், சிருஷ்டியின் முதல்-இடை-கடையின் முழு செய்தியை தெரிவிக்கின்றார். நீங்களும் கூட ஞானம் நிறைந்தவராகி விடுங்கள். சிலர் முழு ஞானம் நிறைந்தவராகி விடு கிறார்கள், சிலருக்கு முற்றிலும் ஞானம் புரிவது (தாரணை) இல்லை. அவருக்கு அதிர்ஷடம் இல்லை என்றுக் கருதப்படுகிறது. சில நல்ல குழந்தைகள் மிகவும் நல்லவிதமாக புருஷார்த்தம் செய்கின்றார்கள். மற்றபடி குடும்பத்தை நிர்வாகம் செய்ய வேண்டும். ஆரம்ப காலத்தில் இவர்கள் 14 வருடம் பட்டி செய்தார்கள். தனது ஆடையை சுத்தம் செய்து- செய்து எவ்வளவு வெள்ளையாகி விட்டது. சிலர் அழுக்கானது அழுக்காகவே இருந்து விட்டது. தற்பொழுது சிலர் ஏழு நாட்கள் கூட இருப்பதில்லை. முன்பு முழுவதுமாக பட்டியில் இருந்தார்கள். இல்லை யெனில் நீங்கள் எவ்வாறு தயாராக முடியும்? செங்கல் சூளையில் இருந்தால் தானே பக்குவ மடைகிறது. பிறகு சில பக்குவப்படாமல் போவதால் உடைந்து விடுகிறது. இங்கேயும் அதுபோன்று நிறைய ஆடைகள் கிழிந்து விடுகிறது, ஸ்ரீமத்படி நடக்காததால் சுத்தம் ஆவதில்லை. இப்போது ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் ஒப்பந்தம் செய்விக்கப்படுகிறது. நான் முழு துôய்மையாக இருக்கின்றேன் என்று சிவபாபா கூறுகின்றார். என்னை நினைவு செய்தால் நீங்களும் பாவனம் ஆகிவிடலாம் என்று அறிவிக் கின்றார். இல்லறத்தில் இருந்து கொண்டே பயிற்சி செய்யுங்கள் என்று ஆணையிடுகிறார். நல்ல குழந்தையாக யார் இருக்கின்றார்களோ அவர்கள் உடனடியாக இந்தப் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இரவில் கண் விழித்து தனது ஆத்மாவை சுத்தம் செய்கின்றார்கள். துôய்மை யானால் ஆடையும் கூட துôய்மையானதாகக் கிடைக்கும் என்று புரிந்து கொள்கினற்னர் ஆகையால் துôக்கத்தை வென்றவராகி விடுங்கள் என்று தந்தை அறிவிக்கின்றார். தந்தையை நினைவு செய்தால் ஆத்மா துôய்மையாகிவிடும். அமிர்தவேளை நேரம் மிகவும் நல்ல நேரமாகும். அந்த நேரத்தில் நினைப்பதற்கு கட்டளை யிடுகிறார். துôக்கம் வந்தால் கண்களில் எண்ணையை விடுங்கள் அதாவது முயற்சி செய்யுங்கள் என்கிறார். நினைவில் இருங்கள் என்று ஸ்ரீமத் கூறுகிறது. மாயா எவ்வளவு புயலை

அனுப்பினாலும் சரி, நீங்கள் பாபாவின் நினைவில் இருங்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான செல்லமான குழந்தைகளுக்கு தாய் தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மேலும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) ஸ்ரீமத்படி முழுமையாக மோகத்தை அழித்துவிடுங்கள். கட்டுப்பாடுடன் யுக்தியாக நடந்து கொள்ள வேண்டும். பதிவேட்டைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது.

2) தூக்கத்தை வென்றவராகி அமிர்தவேளையில் விசேஷமமாக ஆத்மாவை சுத்தம் செய்வதற்காக தந்தையின் நினைவில் இருங்கள். ஞான-யோகத்தால் ஆத்மாவைத் துôய்மை யாக்குங்கள்.

வரதானம் : ஒரே சங்கல்பத்தில் நிலைத்திருந்து மகாதீர்த்தத்தைப் பிரத்யட்சம் செய்யக்கூடிய பொறுப்பான ஆத்மா ஆகுக.

இந்த அபு உலகத்திற்குக் கலங்கரை விளக்காக இருக்கின்றது. இந்த மகா தீர்த்தத்தைப் பிரத்யட்சம் செய்வதற்காக, ஒவ்வொரு ஆத்மாவிற்கும் இங்கிருந்து புகலிடம் கிடைக்க வேண்டும், அனைவருக்கும் நன்மை ஏற்பட வேண்டும் என்ற ஒரே சங்கல்பம் அனைத்து பிராமண குழந்தைகளுக்கும் இருக்க வேண்டும். எப்பொழுது இந்த சுப ஆசை களின் தீபம் ஒவ்வொருவருக்குள்ளும் சுடர்விட்டு எரியுமோ, அனைவருடைய சகயோகம் கிடைக்குமோ, அப்பொழுது காரியத்தில் வெற்றி கிடைக்கும். இது என்னுடைய பொறுப்பு என்ற இந்த சப்தம் அனைவருடைய மனதில் இருந்தும் வெளிப்பட வேண்டும். எப்பொழுது ஒவ்வொருவரும் தன்னை அப்படிப்பட்ட பொறுப்பாளர் என்று புரிந்து கொள்வார்களோ, அப்பொழுது பிரத்யட்சத் தின் கிரணம் அப்பாவினுடைய வீட்டிலிருந்து நாலாபுறங்களிலும் பரவும்.

சுலோகன்: உள்நோக்குமுகம் என்ற விசேஷத்தன்மையை தாரணை செய்தீர்கள் என்றால் அனைவருடைய ஆசீர்வாதங்களும் கிடைத்துக் கொண்டே இருக்கும்.